RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 236 | ஆகஸ்டு.28 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## குடியரசுத் தலைவர் வருகையை முன்னிட்டு சென்னையில் செப்.2, 3 தேதிகளில் 'ட்ரோன்' பறக்க தடை



சென்னை: ஆக.29-

அரசு முறை பயணமாக, குடியரசு தலைவர் சென்னை வருவதை முன்னிட்டு 2, 3 ஆகிய இரு தேதிகளிலும் சென்னையில் ட்ரோன் பறக்க தடை விதித்து காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வரும் 2 மற்றும் 3ம் தேதிகளில் அரசு முறை பயணமாக சென்னை வருகை தர உள்ளார். குறிப்பாக 2ம் தேதி மதியம் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறும் விழாவில் கலந்து கொள்கிறார். பின்னர், 3ம் தேதி விமானம் மூலம் சென்னையிலிருந்து திருச்சிக்கு புறப்படுகிறார்.

முன்னதாக 2ம் தேதி இரவு கிண்டியில் உள்ள ராஜ் பவனில் தங்க உள்ளார். இதையடுத்து சென்னையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை போலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளான, சென்னை விமான நிலையம், சென்னை வர்த்தக மையம் (நந்தம்பாக்கம்), ராஜ் பவன் மற்றும் குடியரசு தலைவரின் வாகனம் செல்லும் வழித்தடங்கள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த பகுதிகளில் 2 மற்றும் 3 ஆகிய இரு தினங்கள் ட்ரோன் கேமராக்கள் மற்றும் எந்தவிதமான பறக்கும் பொருட்கள் பறக்கவிட தடை விதித்து காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

## அனைவரையும் வரவேற்கிறோம்!..

**சிவகங்கை மாவட்டம் வேம்பங்குடி உட்பட்ட கிராமத்தில் கல்குளம் நொண்டி பிரபு திடலில் அமைந்திருக்கும் (கல்குளம் காட்டாணிகுளம் பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட) அருள்மிகு முனியாண்டி சுவாமி, முத்தையா சுவாமி, மற்றும் சுற்றுப்புற பரிபார தெய்வங்களுக்கு நூதன ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் இன்று 29/08/2025 நடைபெற உள்ளது. பக்த கோடிகள் அனைவரும் தவறாத வருகை புரிந்து அய்யனின் அருள் பிரசாதம் பெற்றுச் செல்லுமாறு விழா கமிட்டியாளர்கள்,மற்றும் பாலுசாமி,சிவக்குமார் குடும்பத்தார்கள் சார்பாக அனைவரையும் வருக வருக என வரவேற்கிறோம்.**




## வேம்பங்குடியில் மஹா கும்பாபிஷேக விழா

சிவகங்கை, ஆக.29-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் வேம்பங்குடி கிராமத்திற்கு உட்பட்ட கல்குளம் நொண்டி பிரபு திடலில் அமைந்திருக்கும், கல்குளம், காட்டாணிகுளம், பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட மேற்படி தெய்வங்களுக்கும் 21 பரிவார மூர்த்திகளுக்கும் ஜ°ரணோத்தாரண [நூதன ஆலய அஷ்டபந்த மஹா கும்பாபிஷேகம் விழா அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

சுபஸ்ரீ நிகழும் மங்களகரமான விசுவாவசு வருடம் ஆவணி மாதம் 13ம் தேதி

29.08.2025 வெள்ளிக்கிழமை சஷ்டி திதியும், சுவாமி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் அன்று காலை 8.00 மணிக்குமேல் 9.00 மணிக்குள் முனியாண்டி சுவாமி கோவிலுக்கும், 9.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள் ஸ்ரீ முத்தையா சுவாமி கோவிலுக்கும் மஹா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற இருப்பதால் பக்தகோடி பெருமக்களும், சுற்று வட்டார கிராம பொது மக்களும் கோவில் பங்காளிகளும் திரளாக வருகை தந்து சுவாமிகளின் அருள் பிரசாதம் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மங்கள இசை, தமிழ்திருமுறை, அணிக்கலை விக்னேஸ்வரர் பூஜை, கணபதி ஹோமம், லெட்சுமி குபேர ஹோமம், சுதர்சன ஹோமம். நவக்கிரஹ ஹோமம், வாஸ்து சாந்தி, மிருத்சங்குகரம், அங்கூரார்பனம், ஆச்சாரியார் ரெக்ஷயந்தனம். கலாகர்சனம், யாகபூஜை, பூர்ணாகுதி, ஆசீர்வாதம் தீபஆராதனை நடைபெறும்.

எந்திரஸ்தாபனம், மருந்து சாற்றுதல் நடைபெறும்.

இரண்டாம்கால யஸ்கபூஜை, மண்டபசாந்தி, கோபூஜை, சுவாமிக்கு ரெக்ஷாபந்தனம், நாடி சந்தானம், பூர்ணாகுதி, ஆசீர்வாதம் தீபஆராதனை நடைபெறும்.

யாத்ராதானம், கெடம் புறப்பாடு, மஹா கும்பாபிஷேகம் மஹா அபிஷேகம்,



திருபட்டு சாற்றுதல், மஹா தீபஆராதனை நடைபெறும்.

மாபெரும் பொது அன்னதானம் நடைபெறும். அன்னதான உபயதாரர். உயர்திரு C.R.சுந்தரராஜன் B.Sc., தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பொதுச்செயலாளர்

அன்புடன் அழைக்கும்...

கல்குளம், கட்டாணிகுளம், கூத்தூண்டான், K.நெடுங்குளம், N.நெடுங்குளம், வரிச்சியூர், வாணியங்குடி, காளையார்கோவில், பூவாளி ஊத்திக்குளம், காஞ்சிரங்கால், இடையமேலூர், அமராவதி புதூர், சிவகங்கை

# "திமுக ஆட்சிக்கு எதிரான அவதூறுகளில் சத்தும் இல்லை; சாரமும் இல்லை"

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை: ஆக.29-

தமிழகம் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் மட்டுமல்ல, இந்தியாவின் தொழில்துறை வேலைவாய்ப்பிலும் முன்னணியில் உள்ளது என தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா குறிப்பிட்டுள்ள பதிவை மேற்கோள் காட்டியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், "திராவிட மாடல் ஆட்சியின் சாதனைச் சரித்திரம் தொடரும். அரசியல் காழ்ப்புணர்வில் திமுக ஆட்சிக்கு எதிராக அள்ளிவீசப்படும் அவதூறுகளில் சத்தும் இல்லை; சாரமும் இல்லை என மக்கள் புறந்தள்ளுவார்கள்." எனத் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "அமித் ஷா முதல் பழனிசாமி வரை திமுக ஆட்சியைப் பழித்துரைக்கும் அனைவருக்கும் ஒன்றிய பாஜக அரசே தந்துள்ள 'நெத்தியடி பதில்' இதோ.

சட்டம் ஒழுங்கைப் பேணிக்காத்து, தொழில் செய்வதற்கான சூழலை மேம்படுத்தி, தடையற்ற மின்சாரம் போக்குவரத்து வசதிகள் என அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கி, வேலைக்குத் தேவையான திறன்களை இளம் தலைமுறையினருக்கு அளித்து நாம் நாளும் தீட்டிய திட்டங்களால் இந்தச் சாதனை சாத்தியமாக்கி இருக்கிறது.

திராவிட மாடல் ஆட்சியின் சாதனைச் சரித்திரம் தொடரும். அரசியல் காழ்ப்புணர்வில் திமுக ஆட்சிக்கு எதிராக அள்ளிவீசப்படும் அவதூறுகளில் சத்தும் இல்லை; சாரமும் இல்லை என மக்கள் புறந்தள்ளுவார்கள்." எனத் தெரிவித்துள்ளார்

முன்னதாக, அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா வெளியிட்ட பதிவில், "தமிழ்நாடு வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரம் மட்டுமல்ல, இந்தியாவின் தொழில்துறை வேலைவாய்ப்பிலும் முன்னணியில் உள்ளது.

இன்று வெளியிடப்பட்ட இந்திய அரசின் 2023ஃ-24 ஆம் ஆண்டு தொழில்துறை கணக்கெடுப்பின்படி, தொழில்துறை வேலைவாய்ப்பில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் உள்ள அனைத்து தொழிற்சாலை தொழிலாளர்களில், தமிழகத்தில் 15.24% பேர் உள்ளனர். இது நாட்டின் 6 தொழிற்சாலை தொழிலாளர்களில் கிட்டத்தட்ட ஒருவர் ஆகும்.

40,100க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளுடன் தமிழ்நாடு மீண்டும் இந்தியாவில் அதிக தொழிற்சாலைகளைக் கொண்ட மாநிலமாக உருவெடுத்துள்ளது, இது தேசிய அளவிலான பங்கில் 15.43% ஆகும். எதிர்க்கட்சிகளால் அரசியல் ரீதியாக தூண்டப்படும் பொய்க்கும், அவர்களில் சிலர் எழுப்பும் கேள்விகளுக்கும் இதுவே சிறந்த மறுப்பு. இது எங்கள் தரவுகள் அல்ல, மத்திய அரசின் தரவுகள் ஆகும்.

முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தமிழ்நாடு 14 ஆண்டுகளுக்குப் பிறகு 11.19% பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளது. மற்ற மாநிலங்கள் முதலீட்டில் கவனம் செலுத்தும் அதே வேளையில், இந்த திராவிட மாடல் அரசு வேலைவாய்ப்புகளில் கவனம் செலுத்துகிறது. தமிழ்நாடு தொடர்ந்து திறமையின் தலைநகராகவும், இந்தியாவின் உற்பத்தித் தலைநகராகவும் உள்ளது." எனத் தெரிவித்துள்ளார்.

## மூளை அமீபா பாதிப்பு தொற்று நோய் அல்ல; பதற்றம் வேண்டாம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன்

சென்னை, ஆக.29-

"மூளை அமீபா பாதிப்பு, தொற்று நோய் இல்லை என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். எனவே பெரிய அளவில் பதற்றமடைய வேண்டியதில்லை." என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.



சென்னையில் இன்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது மூளைக்காய்ச்சல் குறித்தான கேள்விக்கு பதிலளித்த அவர், "கேரளாவில் 18 பேர் மூளை தின்னும் அமீபா நோய் பாதிப்பிற்குள்ளாகி சிகிச்சை பெற்று வருவதாக சொல்லப்பட்டுள்ளது.

கடந்த 1 வாரகாலமாகவே இந்த நோயின் தன்மை கூடியிருக்கிறது. நோய் பாதிப்பிற்கான காரணங்களை மருத்துவ வல்லுநர்களிடம் கேட்கும்போது, அசுத்தமான நீர், மாசுபட்ட நீர் நிரம்பிய குளம், குட்டைகள், நீர்நிலைகளில் தேங்கிய சேறுகளில் தான் அமீபா உருவாவதாக சொல்லப்படுகிறது.

அத்தகைய குளம், குட்டைகளில் குளிக்கும்போது மூக்கின் வழியே அமீபா சென்று மூளையை பாதித்து, மூளைக்காய்ச்சல் ஏற்பட்டு மரணங்கள் நிகழ்கிறது. இது தொற்று நோய் இல்லை என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். எனவே பெரிய அளவில் பதற்றமடைய வேண்டியதில்லை.

அசுத்தமான குளம் குட்டைகளில் குளித்ததால்தான் நேக்லேரியா ஃபோவ்லேரி (Naegleria Fowleri) என்ற அமீபா ஏற்பட்டு, அரிதான மூளைக் காய்ச்சல் நோயான, முதன்மை அமீபிக் மெனிங் என்சஃபலிட்டிஸ் (Primary Amoebic Meningo-Encephalitis (PAM) நோய் பாதிப்பு ஏற்படுகிறது.

இந்த நோய் பாதிப்பிற்குள் ளானவர்களுக்கு கடுமையான தலைவலி, காய்ச்சல், வாந்தி, மன குழப்பநிலை, கழுத்து வலி, மயக்கங்கள் போன்ற பாதிப்புகள் ஏற்படுகிறது. கேரள மாநில சுகாதாரத்துறை நோய் பாதிப்பிற்குள்ளானவர்களுக்கு சிறப்பான சிகிச்சைகளை வழங்கி நோய் பாதிப்பிற்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

இந்நிலையில் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களுக்கு அறிவுறுத்துவது என்னவென்றால் குளம் மற்றும் குட்டைகள், பராமரிப்பு இல்லாத நீச்சல் குளங்களில் குளிப்பதை தவிர்த்துக் கொள்வது நல்லது" என்று தெரிவித்துள்ளார்.

பின்னர் தெருநாய்க்கடி தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், "தெருநாய்கள் பிரச்சினை தொடர்பாக உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் கருத்துகள் மாறுபட்டு உள்ளது. தெருநாய்களுக்கு கருத்தடை செய்து அதனை பிடித்த பகுதிகளில் விட்டுவிடுவது மட்டுமே தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையாகும். முதல்வர் தெருநாய்க்கடி சம்பவங்கள் குறித்து விவாதிப்பதற்காக பல்வேறு துறைகள் ஒருங்கிணைத்து கூட்டம் ஒன்றை நடத்தினார்.

அதில் தெருநாய்கள் பராமரிப்பதற்காக குடில்கள் அமைக்கப்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு வட்டார அரசு மருத்துவமனை, அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மட்டுமே மருந்துகள் வழங்கப்பட்டு வந்தது.

இந்த அரசு அமைந்த பிறகு தான் தமிழ்நாட்டு மருத்துவத்துறை வரலாற்றில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்பற ஆரம்ப சுகாதார நிலையங்களில் நாய்கடிக்கு ARV மருந்துகள், பாம்புக்கடிக்கு ASV மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டு கொடுக்கப்பட்டு வருகிறது" இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ரயில்களில் ஏற்படும் கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில் முக்கிய வழித்தடங்களில் சிறப்பு ரயில்கள் இயக்கம்

ரயில்களில் ஏற்படும் கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில் முக்கிய வழித்தடங்களில் ரயில்வே நிர்வாகம் சிறப்பு ரயில்கள் இயக்கி வருகிறது. இது தொடர்பாக சேலம் ரயில்வே கோட்ட அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது; சேலம் வழியாக சென்னை சென்ட்ரல் கண்ணூர் ஒரு வழிப் பாதை சிறப்பு ரயில் (06009) இயக் கப்படும் இந்த ரயில் இன்று (வியாழக்கிழமை) சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து இரவு 11.55 மணிக்கு புறப்பட்டு திருவள்ளுவர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை வழியாக மறுநாள் காலை 5.05 மணிக்கு சேலம் வந்தடையும். இங்கிருந்து 6.15 மணிக்கு புறப்பட்டு ஈரோடு, திருப்பூர், போத்தனூர், பாலக்காடு வழியாக மதியம் 2 மணிக்கு கண்ணூர் சென்றடையும்.



கண்ணூர் பெங்களூரு இடையே சிறப்பு ரயில் கண்ணூர் பெங்களூரு சிறப்பு ரயில் (06125) நாளை (வெள்ளிக்கிழமை) இரவு 9.30 மணிக்கு கண்ணூர் ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு பாலக்காடு, போத்தனூர், திருப்பூர், ஈரோடு வழியாக 30ம் தேதி காலை 5.30 மணிக்கு சேலம் வந்தடையும். பின்னர், அங்கிருந்து 5.40 மணிக்கு புறப்பட்டு பங்காருபேட்டை, கிருஷ்ணராஜபுரம் வழியாக காலை 11 மணிக்கு பெங்களூரு சென்றடையும்.

இதேபோல் மறு மார்க்கத்தில் இயக்கப்படும் பெங்களூரு கண்ணூர் சிறப்பு ரயில் (06126) நாளை மறுநாள் (சனிக்கிழமை) பெங்களூரு ரயில் நிலையத்தில் இருந்து இரவு 7 மணிக்கு புறப்பட்டு கிருஷ்ணராஜபுரம், பங்காருபேட்டை வழியாக இரவு 10.30 மணிக்கு சேலம் வந்தடையும். இங்கிருந்து 10.40 மணிக்கு புறப்பட்டு ஈரோடு, திருப்பூர், போத்தனூர், பாலக்காடு வழியாக மறுநாள் காலை 7.15 மணிக்கு கண்ணூர் சென்றடையும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# காரைக்குடி சுப்பிரமணியபுரதில் எழுந்தருளி அருப்பாளிக்கும் ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் திருக்கோவிலில் 1008 கலச அபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது



காரைக்குடி ஆக.29-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சுப்பிரமணியபுரதில் எழுந்தருளி அருப்பாளிக்கும் ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் திருக்கோவிலில் 1008 கலச அபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.,25.8.25 அன்று மாலை 6 மணிக்கு முதல் காலம் யாக வேள்விகள் நடைபெற்றது.,அதனை தொடர்ந்து 26.8.25 காலை 6 மணிக்கு இரண்டாம் கால வேல்வியும் நடைபெற்றது அதனை தொடர்ந்து உற்சவமூர்த்தி மண்டபத்திற்கு கலச நீர் ஊற்றப்பட்டு கலசஅபிஷேகம் நடைபெற்றது,

அதனை தொடர்ந்து ஸ்ரீ பஞ் சமுக விநாயகருக்கு வெள்ளி அங்கி அணிவிக்கப்பட்டது இன்நிகழ்வில் கோவில் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் மஹா தீபாராதனை,சிறப்பு அன்னதானம் மற்றும் உற்சபமூர்த்தி வீதி உலாவிலும் கலந்துகொண்டு விநாயகரின் அருளை பெற்றனர் மேலும் அணைத்து நிகழ்ச்சிகளையும் விழா குழுவினர் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# புதியதோர் உதயம் உதயம் காட்டன் ஷோரூம் திறப்பு விழா

வேலூர், ஆக.29-

வேலூர் தோட்டப்பாளையம் தர்மராஜா கோவில் சாலை புதிதாக உதயம் காட்டன் ஷோரூம் திறப்பு விழா நடைபெற்றது .

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக வி.ஐ.டி பல்கலைக்கழக துணை வேந்தர் ஜி.வி. செல்வம் திறந்து வைத்து.முதல் விற்பனையை தொடங்கி வைத்தார், இந்த நிகழ்ச்சியில் ஜி.வி.எம்.சி.எச் மருத்துவமனை டாக்டர் ஜி.வி.டி. விஜயகோவிந்தராஜன் துவக்கி வைக்க, வேலூர் டி.ஆர்.எம் குழுமத்தைச் சேர்ந்த எம்.பழனி மற்றும் உதயம் நிறுவன இயக்குனர் பி.ஆர். அருண் ஈஸ்வர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# வேலூர் கொசப்பேட்டை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தெருவில் விநாயகர் சதுர்த்தி மற்றும் சிவாஜி ரசிகர் மன்றம் சார்பாக 162ம் அன்னதான விழா

வேலூர், ஆக.29-

வேலூர் மாவட்டம், வேலூர் கொசப்பேட்டை, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தெரு, ஸ்ரீ மீனாட்சி கல்யாண மண்டபம் அருகில் ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி விழா முன்னிட்டு கர்ணன் சிவாஜி ரசிகர் மன்றம் சார்பாக 162ம் தொடர் அன்னதானம் விழா வேலூர் ஜெய் ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி உரிமையாளர் எச்.திலீப் குமார் குடும்பத்தினர்கள் சார்பில் சுமார் 300 பேர் பொதுமக்களுக்கு சமபந்தி விருந்து வழங்கினர். இதில் விழா அமைப்பாளர் முன்னாள் கவுன்சிலர் புகழேந்தி முன்னிலையில் நடைபெற்றது. இதில் கங்காதரன், சத்யநாராயணன், ஓட்டல் ரவி, பாபு, சந்திரன், வெற்றியரசு மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு அன்னதான விழாவை சிறப்பித்தனர்.



■ மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் சமயநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் சமையற்கூடம் கட்டப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

# த வெக தலைவருக்கு நாவடக்கம் தேவை : இளைஞர் காங்கிரஸ் பாய்ச்சல்



தென்காசி, ஆக.29-

தென்காசி மாவட்டம் தவெக தலைவரும் நடிகருமான விஜய்க்கு முதலில் நாவடக்கம் தேவை தமிழ் பண்பாடு கலாச்சாரம் மரியாதை குறித்து அவர் பாடம் கற்று அதன் பின்னர் அரசியல் களத்தில் குதித்தால் நல்லது என இளைஞர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது..

இதுகுறித்து தமிழக இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர் எஸ் எம். எஃப். அப்துல் காதர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் கூறியிருப்பதாவது : தனக்கு வந்த கூட்டத்தை பார்த்ததும் ஒருவித அரசியல் போதையில் இருக்கும் விஜய் என்ன பேசுகிறோம் என்ற கவனத்தை மறந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை அங்கிள் என்று அழைத்ததோடு நாட்டின் பிரதமரின் பெயரைக் கூட சொல்லி எக்காளம் செய்து வருகிறார் நாட்டை ஆளுகின்ற ஆளுமைகளின் தகுதியில் எள்ளளவாவது விஜய்க்கு இருக்கிறதா மூன்று முறை முதல்வராக தமிழகத்தை கோலோச்சி கொண்டிருப்பவர் நம் தமிழக முதல்வர் அப்படி,ஒரு மாநிலத்தை, ஆட்சி நிர்வாகத்தை, கட்டி ஆள வேண்டும் என்றால் அது சாமானிய காரியமா? இந்தியா சுதந்திரம் அடைந்து 79 ஆண்டுகள் ஆகின்றன. வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்கின்ற பழமொழிகேற்ப தமிழகம் அனைத்து துறைகளிலும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வந்தன ஆனால் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியிலும் மாண்புமிகு தற்போதைய தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சியிலும் தான் தமிழகம் கல்வி வேலை வாய்ப்பு பொருளாதாரம் வேளாண்மை மருத்துவம் என்ற அனைத்து துறைகளிலும் இந்தியாவின் மற்றும் மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக விளங்கி வருகிறது அந்த வகையில் தமிழக முதல்வர் அவர்கள் தன் தந்தையிடம் கற்ற அரசியல் பாடம் ஆளுமை நிர்வாக திறன் அனைத்தையும்ஒருங்கே கற்றுக்கொண்டு இன்று தமிழகத்தின் ஆட்சி நிர்வாகத்தை பார் போற்றும் அளவில் சிறப்போடு நிர்வாகம் செய்து வருகிறார் நமது தமிழக முதல்வர்.

எந்த மேடையிலாவது யாரைப் பற்றியும் எந்த அரசியல் தலைவர்களை பற்றியும் அவதூறாக பேசியதுண்டா? கண்ணியம் குறைந்ததுண்டா அப்பேர்ப்பட்ட தமிழக முதல்வரை பேச விஜய்க்கு என்ன அருகதை இருக்கிறது நடிகர் நடிகை என்றால் நம் மக்கள் ஓடி சென்று பார்ப்பார் அது அவர்கள் இயல்பு அந்தக் கூட்டம் ஓட்டாக மாறும் என்று அரசியலில் புதிதாக முளைவிட துவங்கியிருக்கும் விஜய் அறிந்திருக்க தெரிந்திருக்க வாய்ப்பில்லை அவர் இது குறித்து எதிர்பார்ப்பதை என்னவென்று சொல்வது பன்னெடுங்காலம் அரசியலில் ஊறி திளைத்த ஒருவரை அங்கில் என சகட்டுமேனிக்கு பேசுவது பெயர் சொல்லி அழைப்பது என்பதெல்லாம் வளர்ந்து வரும் ஒரு நல்ல அரசியல்வாதிக்கு நல்லதில்லை இல்லை முதலில் நாவடக்கம் தான் நாட்டு மக்களிடையேயும் அரசியலிலும் ஒருவர் ஜொலிப்பதற்கான வழி முதலில் யாரை எப்படி மதிக்க வேண்டும் என்பது குறித்து தமிழக கலாச்சார பண்பாடு துறையில பாடம் கற்றுக்கொண்டு அதன் பின் அரசியல் களத்தில் குதித்தால் நல்லது என்று விஜய்க்கு இந்த நேரத்தில் தமிழக இளைஞர் காங்கிரஸ் எச்சரிக்கையுடன் கூடிய கண்டனத்தை பதிவு செய்கிறது.

இவ்வாறு அந்த கண்டன அறிக்கையில் அப்துல் காதர் தெரிவித்துள்ளார்.



# வேலூர் தொரப்பாடி, பாலாஜி நகரில் 30ம் ஆண்டு ஸ்ரீ வீரசக்தி விநாயகர் சதுர்த்தி விழா

## காவல்துறை கட்டிடம், துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு விநாயகர், ரைட்டர், சிறை கைதி மற்றும் விநாயகர் திருவுருவ சிலை

வேலூர் ஆக.29-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, தொரப்பாடி, பாலாஜி நகரில் 30ம் ஆண்டு ஸ்ரீ வீரசக்தி விநாயகர் சதுர்த்தி விழா பொதுமக்கள் மற்றும் உபயதாரர்கள் ஆதரவில் விழா குழுவினர் என்.சக்தி தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம் மற்றும் ஸ்ரீ நாராயணி பள்ளிகள் அறங்காவலரும் இயக்குனருமான எம்.சுரேஷ்பாபு கலந்துகொண்டு சிறப்பு பூஜைகள் செய்து இனிப்புகள் வழங்கி அன்னதானத்தை துவக்கி வைத்தனர். எங்கும் காணக் கிடைக்காத வகையில் தத்ரூபமான வடிவில் வடிவமைக்கப்பட்ட இந்த விநாயகரின் பல்வேறு அமைப்புகளில் கட்டிட அமைப்பு நிறுவி, உருவமும் காண்போரை கவர செய்தது. இதில் விழா குழுவினர்கள் சரவணன், மதன்குமார், அனீஷ்குமார், இளைஞர் அணியினர் மனோஜ், தண்டபாணி, கார்த்திக், என்.பாலாஜி, எம்.பாலாஜி, மோகன், அரிநாத், ஹரிகிருஷ்ணன், யுவராஜ், எஸ்.கார்த்திக், என்.கார்த்திக், பிரத்தீவ், ஆகாஷ், அருண், அர்ஜுன், லிங்கேஷ், மோனிஷ், யுமேஷ், நித்திஷ்குமார் ஜீவன்ஸ்ரீ, மற்றும் பலர் கலந்து கொண்டு விநாயகர் சதுர்த்தி விழாவை கோலாகலமாக சிறப்பித்தனர். இதன் சிறப்பு: இங்கு காவல்துறை கட்டிடம், நுழைவு வாயிலில் பாதுகாப்பில் துப்பாக்கி ஏந்திய இரு விநாயகர் காவலர்கள், நோட்டீஸ் போர்டில் கொழுக்கட்டை கொட்டை திருடிய குற்றவாளிகள் பட்டியல் போன்று வடிவமைத்தும், ரைட்டர், சிறை கைதி, மற்றும் தத்துரூபமாக காண்போரை கவரும் வகையில், உயரமான விநாயகர் சிலை நின்ற வடிவமைப்பில் அமைக்கப்பட்டுள்ளளனர். இதனை பல்வேறு இடங்களில் இருந்து பக்தர்கள் பொதுமக்கள் என பார்வையிட திரளாக வருகைபுரிந்து கட்டிட வடிவிலும், இந்த விநாயகர் சிலைகளை, ஓ வித்தியாசமாக உள்ளது என பலர் வருகை புரிந்து பார்வையிட்டு கண்டு மகிழ்ந்தனர்.



# சத்துவாச்சாரியில் சீப் அண்ட் பெஸ்ட் பெண்கள் அழகு நிலையம் திறப்பு விழா!

வேலூர், ஆக.29-

வேலூர் மாவட்டம், வேலூர், சத்துவாச்சாரி, பழைய முருகன் தியேட்டர் காம்ப்ளக்ஸ், சீப் அண்ட் பெஸ்ட் பெண்கள் அழகு நிலையம் திறப்பு விழா, பிரபு குமாரசாமி, ஷாலினி ஹரிஹரசுதன் மற்றும் ஜெயப்பிரியா ஹரி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக திமுக மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு எம்.எல்.ஏ. நந்தகுமார், வேலூர் எம்.எல்.ஏ. கார்த்திகேயன், மாவட்ட ஊராட்சி திட்ட குழு பெருந்தலைவர் மு.பாபு, குருவாயூரப்பன் டிரான்ஸ்போர்ட் உரிமையாளரும், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான எல்.சம்பத் ஆகியோர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்து விளக்கேற்றி சிறப்பித்தனர். இந்த பெண்கள் சிறப்பு அழகு நிலையம் வேலூரில் முதல்முறையாக பெண்கள் மட்டும் என இந்த அழகு மாளிகை திறக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஒரு மாதத்திற்கு சிறப்பு சலுகையாக 25% சிறப்பு சலுகையும், 365 நாட்களும் சிறப்பு சலுகை இடம்பெறும் என அறிவித்துள்ளனர், 19 ரூபாயில் ஐப்ரோ த்ரெட்டிங் மற்றும் 199 ஹேர் கட்டிங் போன்ற சிறப்பு சலுகையில் இந்த சீப் அண்ட் பெஸ்ட் பெண்கள் அழகு நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

# திருப்பூர் நெடுஞ்சாலைத்துறை சிறு பாலங்களில் பராமரிப்பு வேலை தீவிரம்

திருப்பூர், ஆக.29-

திருப்பூர் நெடுஞ் சாலைத்துறை திருப்பூர் கோட்டம். திருப்பூர் தெற்கு உட்கோட்டத்தில். உள்ள மாநில நெடுஞ்சாலையான, கோவில் வழி காரப்பாளையம், சாலை மாவட்ட முக்கியமான சாலையான வீரபாண்டி உகாயனூர் சாலை மாவட்ட இதர சாலையான பெத்தாம்பாளையம் ஊகாயனூர் காவெட்டி ரங்கன் புதூர் அழகுமலை, கண்டியன் கோயில், போன்ற சாலைகளில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது விரைவில் பருவ மழை தொடங்க இருப்பதால். நெடுஞ் சாலைத்துறை பொறியாளர் ரத்தினசாமி அவர்களின் உத்தரவின் அடிப்படையில் உட்கோட்டம் முழுவதும் பாலங்களை பராமரித்து மழை நீர்கள் தங்கு தடை இன்றி செல்வதற்கு ஏதுவாக தண்ணீர் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பாலங்களை சார்ந்து இருக்கும் நீர் ஓடைகளின் அடைப்புகள் அனைத்தையும் சரி செய்யப்பட்டு. மற்றும் நீரோடைகளைச் சுற்றி வளர்ந்து இருக்கும் முள் புதர்களை ஜேசிபி இயந்திரம் மூலமாக அகற்றும் பணிகளும் மற்றும் சாலை ஓரமாக இரு புறங்களிலும் உள்ள புல் மற்றும் முள் புதர்களை மற்றும் ஆங்காங்கே இருக்கும் மண்மேடுகளை இயந்திரம் மற்றும் நெடுஞ்சாலைத்துறை பணியாளர்களை வைத்து சமன் செய்து வேலைகள் நடைபெற்று வருகிறது. இவ்வாறு பாலங்கள் மற்றும் சாலைகள் முறையாக பராமரிப்பு செய்யப்படுவதால். மழைக்காலங்களில் மழை நீர்கள் தேங்காமல் வடிகால் பகுதிக்கு செல்வதற்கு வாய்ப்பாக அமையும் என்று நெடுஞ் சாலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இளையான்குடி பேரூராட்சி கூட்டத்தில் தெருநாய்களை கட்டுப்படுத்த கவுன்சிலர் வைத்த கோரிக்கை




இளையான்குடி ஆக.29

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சி மன்றத்தில் சாதாரண கூட்டம் பேரூராட்சி தலைவர் நஜுமுதின் தலைமையில் நடைபெற்றது.இக்கட்டத்தில் துணைத் தலைவர், கவுன்சிலர்கள், பேரூராட்சி பணியாளர் ,செயல் அலுவலர் பங்கேற்றனர். இளையான்குடி பேரூராட்சி மன்ற கூட்டத்தில் அதிமுக நகர செயலாளர், 17வது வார்டு கவுன்சிலர் நாகூர் மீரா அடிப்படை பிரச்சனை சம்மதமான கோரிக்கைகள் வைத்தார்

1. சமுத்திர ஊரணியில் கழிவு நீர் கலக்கிறது அதனை நிரந்தமாக தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. பேரூராட்சி பகுதிகளில் தெரு நாய்கள் அதிகளவில் பெருகிவிட்டது, பொதுமக்களை அச்சுறுத்தி வருகிறது உடனடியாக தெருநாய்களை பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. மழை காலம் நெருங்குவதால் கொசுக்கள் பெருகி கொடுக்கடியால் மக்கள் அவதியுற்று வருகிறார்கள் கொசு மருந்து அடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. 17வது வார்டில் பழைய செம்பிறை மருத்துவமனையை அருகில் செல்லும் கழிவு நீர் வடிகாலை தூர் வாரி மராமத்து செய்து தர வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து பேசினார். பேரூராட்சி தலைவர் நஜுமுதின் கூறுகையில் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்..



# வேலூர் சங்கரன்பாளையத்தில், அசோகா நீரழிவு மற்றும் மகளிர் மருத்துவ மையம் திறப்பு விழா!

வேலூர், ஆக.29-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சங்கரன்பாளையம், வீராசாமி நகரில் அசோகா நீரிழிவு மற்றும் மகளிர் மருத்துவ மையம் திறப்பு விழா நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழகம் வேந்தர். முனைவர். கோ.விசுவநாதன் கலந்து கொண்டு துவக்கி வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாமன்ற உறுப்பினர் தவமணி தாமோதரன், ராமலிங்கம், ஜெயந்தி, தாமோதரன், புவனேஸ்வர மற்றும் தொழிலதிபர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு மருத்துவமனை திறப்பு விழாவை சிறப்பித்தனர்.



■ மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், தேனூர் ஊராட்சி கட்டப்புளி 400 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டா இடத்தில் முதற்கட்டமாக 72 மாற்றுத்திறகள், 37 திருநங்கைகள், 85 வறுமைகோட்டிற்குள் கீழ் உள்ள நபர்கள் என மொத்தம் 194 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் புதிய வீடுகளின் கட்டிட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தொழில் முனைவோர் மேம்பாட்டு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் "நிமிர்ந்து நில்" திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் கல்லூரிகளின் பங்களிப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள், சென்னை தொழில் முனைவோர் மேம்பாட்டு மற்றும் புத்ததாக்க நிறுவனத்தின் இயக்குநர் திரு.இரா.அம்பலவாணன் இ.த.க.ப., அவர்கள் ஆகியோர் "நிமிர்ந்து நில்" திட்டத்தின் விழிப்புணர்வு பதாகைகளை வெளியிட்டார்கள். அண்ணா பல்கலைக்கழக மதுரை மண்டல வாளாகம் முதல்வர்.திரு.லிங்கத்துரை அவர்கள் உடன் உள்ளார்.



■ மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் சமயநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் பணிரெண்டாம் மாணவ மாணவிகளின் ஆங்கிலம் பாடம் கற்றல், கற்பித்தல், செயல்பாடுகள், வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை திறன்கள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே. பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

# சென்னை மெட்ரோ ரயிலுக்கான வாட்ஸ்அப் ஆன்லைன் டிக்கெட் வாங்குவதில் தொழில்நுட்பக் கோளாறு

சென்னை, ஆக.29-

மெட்ரோ ரயிலுக்கான வாட்ஸ்அப் ஆன்லைன் டிக்கெட் வாங்குவதில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளதாக மெட்ரோ நிர்வாகம் அறிவித்துள்ளது. இது குறித்து கூறியதாவது, சென்னை மெட்ரோ ரயிலுக்கான வாட்ஸ்அப் ஆன்லைன் டிக்கெட் வாங்குவதில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளதாகவும், வாட்ஸ்அப் சாட்பாட் தற்காலிகமாக வேலை செய்யவில்லை எனவும் மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதனால், பயணிகள் CMRL மொபைல் செயலி, Paytm, phonepe, Singara Chennai Card, CMRL பயண அட்டைகள் போன்ற பிற முறைகள் மூலம் டிக்கெட்டுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சென்னை மெட்ரோ நிர்வாகம் வேண்டுகோள் விடுத்தது. எனவே, அனைத்து பயணிகளும் பயண அட்டைகள் போன்ற பிற முறைகள் மூலம் டிக்கெட்டுகளைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் தகவல் வரும் வரை பயணிகள் கவுண்டரிலும் டிக்கெட்டுகளைப் பெறலாம். ஏற்பட்ட சிரமத்திற்கு **CMRL** வருந்துகிறது. மேலும் தகவல்கள் விரைவில் புதுப்பிக்கப்படும். இவ்வாறு தெரிவித்தது.

# ஆளுநரும், முதல்வரும் ஒரே உறையில் இரண்டு வாள்களாக இருக்க முடியாது: உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வாதம்

புதுடெல்லி, ஆக.29-

மாநில அரசு அனுப்பும் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கும் விவகாரத்தில் ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவருக்கு காலக்கெடு விதித்தது தொடர்பான வழக்கில், 'ஆளுநரும் முதல்வரும் ஒரே உறையில் இரண்டு வாள்களாக இருக்க முடியாது' என உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வாதிட்டுள்ளது.

மாநில அரசு அனுப்பும் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கும் விவகாரத்தில் ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவருக்கு காலக்கெடு விதித்தது தொடர்பான விவகாரத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு எழுப்பிய 14 கேள்விகள் தொடர்பான வழக்கின் விசாரணை உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர்களை நீதித்துறை



காலக்கெடுவிற்குள் கட்டுப்படுத்த முடியாது என மத்திய அரசும், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், சத்தீஸ்கர், கோவா, ஹரியானா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் போன்ற மாநிலங்களும் வாதிட்டன.

இந்த வழக்கில் தமிழக அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி இன்று ஆஜரானார். அவர் தனது வாதத்தில், " பொறுப்புள்ள அரசாங்கங்களில், ஆளுநரின் விருப்புரிமைக்கு இடமில்லை. ஆளுநருக்கு உள்ள தனிப்பட்ட விருப் புரிமை என்பது குழப்ப த்தையே உருவாக்கும்.

பிரிவு 163 என்பது அமைச்சரவையின் ஆலோசனையை எதிர்த்து அல்லது இல்லாமல் செயல்பட ஆளுநருக்கு பொது விருப்புரிமை அதிகாரத்தை வழங்கவில்லை. பிரிவு 163, ஆளுநர், அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் மட்டுமே செயல்பட வேண்டும் என்று கூறுகிறது.

அம்பேத்கரின் கருத்துகளை ஏற்றுக்கொள்ளும் நீதிபதி எம்.எம்.புஞ்சி கமிஷன் அறிக்கையின்படி, 'அரசியலமைப்பின் கீழ் ஆளுநருக்கு அவரே செய்யக்கூடிய எந்தப் பணிகளும் இல்லை; ஆளுநர், எந்த குறிப்பிட்ட சூழ்நிலையிலும், அமைச்சகத்தை மீற முடியாது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் சட்டப்பேரவை செயல்பாட்டில் ஒரு பகுதியாக இருக்கிறார், ஆனால் அவர் மாநில சட்டப் பேரவையின் ஒரு பகுதியாக இல்லை. அவர் ஒரு சட்டப்பேரவை உறுப்பினர் அல்ல. சட்டப்பேரவை செயல்பாட்டில் அவருக்கு ஒரு பங்கு இருக்கலாம். அதுவும் அமைச்சர்கள் குழுவின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில்தான் உள்ளது. ஆனால், அவர் மாநில நிர்வாகம் அல்லது சட்டமன்றத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது.

ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவை ஆளுநரைக் கொண்டிருக்கும் என்று பிரிவு 168 கூறினாலும், மாநில சட்டப்பேரவையின் எந்த அவையிலும் ஆளுநருக்கு எந்த பொறுப்பும் ஒதுக்கப்படவில்லை. எனவே ஆளுநர் ஒரு சூப்பர் முதல்வரைப் போல செயல்பட முடியாது.

ஜனநாயகம் மற்றும் நாடாளுமன்ற அரசாங்கத்தின் நலனுக்காக, மாநிலத்தின் நல்லாட்சிக்கு முதல்வர் மற்றும் அவரது அமைச்சரவை பொறுப்பேற்க வேண்டும் என்று பி.ஆர்.அம்பேத்கர் கூறுகிறார். அதற்கு ஆளுநர் ஒரு வசதி செய்பவர் மட்டுமே, தலையிடுபவர் அல்ல, குழப்பத்தை ஏற்படுத்துபவர் அல்ல. ஒரே உறையில் இரண்டு வாள்கள் இருக்க முடியாது. ஆளுநரும் முதல்வரும் ஒரே உறையில் இரண்டு வாள்களாக இருக்க முடியாது.

ஆளுநருக்கு மூன்று வழிகள் மட்டுமே உள்ளன, அவர் மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க விரும்பவில்லை என்றால், அவர் அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனைக்கு கட்டுப்படாமல் கூட, மசோதாவை ஒரு முறை மாநில சட்டப்பேரவைக்கு திருப்பி அனுப்பலாம் அல்லது ஆளுநர் அந்த மசோதாவை குடியரசுத் தலைவரிடம் அனுப்பலாம். ஒப்புதலை நிறுத்தி வைப்பதன் மூலம் மசோதாவை தோல்வியடையச் செய்வதற்கான நான்காவது வழி, ஐந்தாவது வழிகள் இல்லை' எனத் தெரிவித்தார்.



# கொடைக்கானல் அருகே 100 அடி பள்ளத்தில் ஜீப் விழுந்து பெண் பலி, ஆண் படுகாயம்

திண்டுக்கல், ஆக.29-

திண்டுக்கல், கொடைக்கானல், பெருமாள்மலை, அடுக்கம் மலைச்சாலை சாமக்காட்டு பள்ளம் பகுதியை சேர்ந்த செல்லத்துரை மகன் ராஜசேகர்(25) இவர் தனது உறவினரான (ராஜசேகருக்கு நிச்சயம் செய்யப்பட்ட பெண்) தீபிகாவுடன் தங்களது தோட்டம் அமைந்துள்ள சாமக்காட்டு பள்ளம் பகுதியில் ஜீப்பில் சென்ற நிலையில் ஆபத்தான வளைவில் திரும்பிய போது எதிர்பாராத விதமாக கட்டுப்பாட்டை இழந்து ஜீப் 100 அடி பள்ளத்தில் உருண்டு விபத்துக்குள்ளானது

இந்த விபத்தில் தீபிகா சம்பவ இடத்திலேயே பலியானார் ராஜசேகர் படுகாயம் அடைந்து கொடைக்கானல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்இது தொடர்பாக கொடைக்கானல் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்


# அமெரிக்க வரி விதிப்பால் வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு ரூ.5000 உதவி: அரசுக்கு அன்புமணி வேண்டுகோள்

சென்னை, ஆக.29-

அமெரிக்காவின் வர்த்தகப் போர் காரணமாக ஏற்படும் தொழில் வீழ்ச்சி, வேலைவாய்ப்பு இழப்பை தடுக்க ஊக்குவிப்பு திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டும். இதனால் தமிழ்நாட்டில் வேலை இழக்கும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தமிழக அரசு மாதம் குறைந்தது ரூ.5000 உதவி வழங்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு அமெரிக்க அறிவித்துள்ள 50% வரி விதிப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ள நிலையில், அதன் பாதகங்கள் அப்பட்டமாக தெரியவந்துள்ளன. பல்லாயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு, பல லட்சம் பேருக்கு வேலையிழப்பு என அமெரிக்க வர்த்தகப் போரின் விளைவுகள் மிக மோசமாக இருக்கும் நிலையில், அதன் தாக்கத்தை இயன்றவரை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கெ ாள்ள வேண்டியது அவசியமாகியுள்ளது.

உலகின் பல நாடுகளுடன் வர்த்தகப் போரை நடத்தி வரும் அமெரிக்கா, முதலில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 25% வரி விதித்தது. இந்த வரி விதிப்பு கடந்த 7ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது. இந்த அளவுக்கான வரி விதிப்பே இந்திய ஏற்றுமதித் துறையை மிகக்






கடுமையாக பாதிக்கும் என்று தொழில்துறையினர் அஞ்சிய நிலையில், ரஷ்யாவிடமிருந்து அதிகளவில் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு தண்டம் விதிக்கும் வகையில் மேலும் 25% இறக்குமதி வரி விதிப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். இந்த வரி விதிப்பும் நேற்று நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 50% வரி விதிக்கப்படுவதால், இயல்பாக இந்தியப் பொருள்களின் விலை 50%க்கும் கூடுதலாக அதிகரிக்கும். அதே நேரத்தில் வங்கதேசம், வியட்நாம், கம்போடியா போன்ற பிற ஆசிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஆயத்த ஆடை, காலணிகள், தங்க நகைகள் உள்ளிட்ட பொருள்களுக்கு 20%க்கும் குறைவான வரியே விதிக்கப்படுவதால் அவற்றின் விலைகள் ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கும். இந்தியப் பொருள்களின் விலை அதிகமாக இருக்கும் என்பதால் அமெரிக்க வணிகர்கள் இந்தியப் பொருட்களை வாங்குவதை நிறுத்தி விட்டனர்.

இந்தியாவின் மிகப்பெரிய ஏற்றுமதி மையங்களில் அமெரிக்க மிகவும் முக்கியமானது ஆகும். 2024ஆம் ஆண்டில் மட்டும் இந்தியா ரூ.7.56 லட்சம் கோடி மதிப்பிலான பொருள்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. இந்தியாவில் உள்ள சுமார் 2 லட்சம் ஏற்றுமதியாளர்களில் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அமெரிக்காவுக்கு மட்டும் தான் பொருள்களை ஏற்றுமதி செய்து வருகின்றனர். அமெரிக்க ஏற்றுமதி அடியோடு நின்று விட்ட நிலையில் இந்திய ஏற்றுமதியாளர்களும், ஏற்றுமதி செய்யப்படும் பொருள் சார்ந்த தொழில் துறைகளும் கடுமையாக பாதிக்கப்படும். பாதிப்புகள் அளவிட முடியாத அளவுக்கு அதிகமாக இருக்கக்கூடும்.

அமெரிக்கா தொடுத்துள்ள வர்த்தகப் போரின் காரணமாக தமிழ்நாடு மிகக் கடுமையாக பாதிக்கப்படும். கோவை, திருப்பூர் மாவட்டங்களில் இருந்து ஆண்டுக்கு ரூ.73 ஆயிரம் கோடிக்கு ஆடை வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. ரூ.15,000 கோடிக்கு பின்னலாடைகள் மட்டும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இவை அனைத்தும் முற்றிலுமாக முடங்கி விட்டன. அதுமட்டுமின்றி, அமெரிக்க பயன்பாட்டிற்காக தனியாக தயாரிக்கப்பட்ட ஆடைகளை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாது என்பதால், அவற்றை வந்த விலைக்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால் திருப்பூர் பகுதியில் மட்டும் 2 லட்சத்திற்கும் கூடுதலான தொழிலாளர்கள் வேலை இழக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் தோல்பொருள்களில் 30% அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அங்குள்ள சில நிறுவனங்கள் தங்களின் உற்பத்தியில் 60% பொருள்களை அமெரிக்காவுக்கு அனுப்பி வருகின்றன. அமெரிக்க நடவடிக் கையால் அங்கு 75,000 பேர் வேலை இழப்பர்.

அமெரிக்க நடவடிக்கையால் தமிழ்நாட்டில் பாதிக்கப்படும் இன்னொரு துறை கடல் உணவு ஏற்றுமதித் துறை ஆகும். தமிழ்நாட்டிலிருந்து மட்டும் அமெரிக்காவுக்கு ஆண்டுக்கு 90 ஆயிரம் டன் சென்னாக்கூனி இறால் பதப்படுத்தப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அமெரிக்கா அதிக வரியை விதித்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் உள்ள கடல் உணவு ஏற்றுமதி நிறுவனங்கள் தங்களின் உற்பத்தியை பாதியாக குறைத்து விட்டன. அதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க வர்த்தகப் போர் காரணமாக நேரடியாக ஏற்படும் பாதிப்புகளை விட இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை பாதிப்புகள் மிகவும் மோசமானதாக இருக்கும். அதிக எண்ணிக்கையில் வேலை இழப்புகள் ஏற்படுவதால் வறுமையும், அதன் காரணமாக குற்றச் செயல்கள் பெருகும் ஆபத்தும் உள்ளது.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, இந்த பாதிப்புகளின் தாக்கத்தை முழுமையாக தடுக்க முடியாது என்றாலும் கூட, இந்தியத் தொழில்துறையினரும், தொழிலாளர்களும் பாதிக்கப்படாத வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 2008ஆம் ஆண்டு பொருளாதார மந்தநிலையின் போதும், கொரோனா காலத்தின் போதும் தொழில்துறையினருக்கு வழங்கப்பட்டதைப் போல ஊக்குவிப்பு சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

வங்கிகளுக்கு தொழில் நிறுவனங்கள் செலுத்த வேண்டிய கடன் தவணைகள் நிலைமை சீரடையும் வரை நிறுத்தி வைப்பது, அவற்றுக்கான வட்டியை தள்ளுபடி செய்வது, நிலைமை சமாளிக்க அவசர கால கடன் வழங்குவது, வட்டி மானியத்தை அதிகரிப்பது, வரிச் சலுகைகளை உயர்த்துவது உள்ளிட்ட சலுகைகளை மத்திய அரசு வழங்க வேண்டும். அதேபோல், தமிழ்நாட்டில் வேலை இழக்கும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தமிழக அரசு மாதம் குறைந்தது ரூ.5000 உதவி வழங்க வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார்



# விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு த.வெ.கா அன்னதான விழா!

வேலூர், ஆக.29-

வேலூர் மாவட்டம் பழைய பேருந்து நிலையம் பர்மா பஜார் அருகில் உள்ள கற்பக விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு தமிழக வெற்றி கழகத்தின் வேலூர் மேற்கு மாவட்ட தொண்டர் அணி சார்பாக 1000க்கு மேற்பட்ட இருக்கு அன்னதானம் வழங்கும் விழா. மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வேல்முருகன் அன்னதானத்தை துவக்கி வைத்தார் இந்த நிகழ்ச்சியில் தலைமை வேலூர் மேற்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் தமிழக வெற்றி கழகம் இம்தியாஸ். மற்றும் தொண்டர் அணி அமைப்பாளர் செந்தில்குமார் மற்றும் கட்சி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்..

# குரோம்பேட்டையில் 22,000 விநாயகர் சிலைகளுடன் கண்காட்சி : தமிழக அமைச்சர் தா.மோ அன்பரசன் திறந்து வைத்தார்

குரோம்பேட்டை ஆக.29

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை ராதா நகர் பகுதியில் விநாயகர் பக்தர் சீனிவாசன் 19வது ஆண்டாக 22,000 விநாயகர் சிலைகளுடன் கண்காட்சி நடத்தி வருகிறார்.

இன்று முதல் செப்டம்பர் 7ஆம் தேதி வரை நடைபெறுகின்ற கண்காட்சி விதவிதமான பிள்ளையார் சிலைகள் வைக்கப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கு இலவச அனுமதி வழங்கப்படுகிறது

கண்காட்சியை தமிழக சிறு குரு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ .அன்பரசன் திறந்து வைத்து பார்வையிட்டார்

பல்லாவரம் எம்எல்ஏ இ.கருணாநிதி தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ் உட்பட ஏராளமானவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்





இந்த கண்காட்சியில் சிப்பிக்குள் முத்து போல பிள்ளையார் முத்துலிருந்து பிறந்து வருவது போல தத்ரூபமாக இந்த ஆண்டு விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளது

இருளிலும் மின்னும் ரேடியம் பிள்ளையார் திண்ணையில் படுத்து ஓய்வெடுக்கும் பிள்ளையார், சங்கு பிள்ளையார் என பல்வேறு பிள்ளையார்கள் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளது

குறிப்பாக ராணுவத்தில் சண்டை போடும் பிள்ளையார் இடம் பெற்றுள்ளது.

இதில் தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை, ஐம்பொன், இரும்பு, கண்ணாடி உள்ளிட்டவற்றால் செய்யப்பட்ட விநாயகர் சிலைகள் இடம் பெற்றுள்ளன.

விநாயகர் கண்காட்சியை ஏற்பாடு செய்த சீனிவாசன் ஒவ்வொரு விநாயகரின் சிறப்பம்சங்கள் குறித்து அமைச்சருக்கு எடுத்துரைத்தார்.




# விதைகள் விற்பனை செய்ய தடை மற்றும் உரிமம் ரத்து : அதிகாரிகள் நடவடிக்கை

சிவகங்கை, ஆக.29-

உரிய ஆவணங்கள் இல்லாததால் சிவகங்கை மாவட்டத்தில் நெல் விதைகள் விற்பனை செய்ய தடை விதித்தும், விதை விற்பனை உரிமங்கள் ரத்து செய்திடவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

திடீர் ஆய்வு

சிவகங்கை / இராமநாதபுரம் விதை ஆய்வு துணை இயக்குநர் ம.இப்ராம்சா மற்றும் அழகர்ராஜா, விதை ஆய்வாளர், சிவகங்கை ஆகியோர் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை மற்றும் கண்ணங்குடி வட்டாரங்களில் செயல்படும் அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது விற்பனைக்கு இருப்பு வைக்கப்பட்ட விதைக் குவியல்களின் தரத்தை அறிய விதை கொள்முதல் ஆவணங்கள், விற்பனை பட்டியல், தனியார் விதைகளுக்கான பதிவுச் சான்றுகள், விதை பகுப்பாய்வு முடிவறிக்கைகள், விதை இருப்பு பதிவேடு மற்றும் விற்பனை ரசீது ஆகியவைகள் விதைச்சட்டப்படி பராமரிக்கப்படுவது குறித்து ஆய்வு செய்தனர்.

விற்பனையாளர்களுக்கு அறிவுரை

அப்போது, விற்பனை ரசீதுகளில் குவியல் எண் மற்றும் காலாவதி நாள் குறிப்பிட்டு பட்டியல் வழங்க, விதை விற்பனையாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. மேலும், விதைகள் பெறப்பட்டவுடன் பணி விதை மாதிரி எடுத்து பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி, முளைப்புத்திறனை உறுதி செய்த பிறகே, பருவத்திற்கேற்ற விதைகளை விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து விதை விற்பனை நிலையங்களில் இருப்பில் இருந்த நெல் விதை குவியல்களில் இருந்து விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டது. பின்னர், அவற்றின் தரத்தை உறுதி செய்ய சிவகங்கையில் செயல்படும் விதை பரிசோதனை நிலையத்திற்கு ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

நெல் விதைகளுக்கு தடை

தனியார் விதை விற்பனை நிலையங்களில் தமிழ்நாட்டிற்கு அங்கீகரிக்கப்படாத நெல் ரகங்களுக்கு மூன்று விற்பனை நிறுவனங்களில் விற்பனை தடை செய்யப்பட்டது. முறையான ஆவணங்கள் பராமரிக்கப்படாமல் இருத்தல், சரியான முறைப்படி இருப்பு வைக்காமல் இருத்தல் மற்றும் விற்பனை நிலையங்கள் செயல்படாமல் இருத்தல் ஆகிய காரணங்களுக்காக 15 எண்கள் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.



■ கழகப் பொதுச்செயலாளர், வருங்கால முதலமைச்சர், புரட்சித்தமிழர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் "மக்களை காப்போம், தமிழகம் மீட்போம் " என்ற உன்னத நோக்கத்தை லட்சியமாகக் கொண்டு வருகின்ற 11.09.2025 வியாழக்கிழமை அன்று திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்டம் ( தாராபுரம் மற்றும் மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி வாரியாக "புரட்சித் தமிழரின் எழுச்சிப் பயணம்" பிரச்சார சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளதை முன்னிட்டு தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் சுற்றுப்பயணத்திற்கான இடம் தேர்வு செய்யும் பணியை கழக தலைமை நிலைய செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி கொறடா மாண்புமிகு அண்ணன் திரு.**S.P.**வேலுமணி **M.A.,M.Phil.,MLA** அவர்களின் அறிவுறுத்தலின்படி திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு **C.**மகேந்திரன் **M.A.,MLA** அவர்கள் கழக நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். இந்நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், சார்பு அணி செயலாளர் மற்றும் நிர்வாகிகள் என அனைவரும் கலந்து கொண்டனர்.





# விருதுநகர் பெண்கள் கல்லூரியில் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது

விருதுநகர், ஆக.29

விருதுநகர் மற்றும் மதுரை மாவட்டகளின் மங்கையர் கவசி மற்றும் வே.வ.வன்னிய பெருமாள் பெண்கள் கல்லூரியில் வெற்றி நிச்சயம் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி திறன் மேம்பாட்டு பயிற்சியின் தலைவரும் தாம்பரம் மாநகர அயலக அணியின் அமைப்பாளருமான டி.ஆர். சிவகுமார் **Mphil LLB** தலைமையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது இதில் மாணவி திருஷ்ணா அனைவரையும் வரவேற்றார்

இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட கலெக்டர் சுகபுத்ரா, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக நிர்வாக இயக்குனர் கிராந்தி குமார், கல்லூரி செயலாளர் மதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்

இதில் மாணவிகள் ஒவ்வொருவரும் திறன்பட கற்று தொழில் முனைவோராக வேண்டும் என்றனர் இந்த நிகழ்ச்சியில் , பிஹைவ் கம்யூனிகேஷன் கிளப் திறன் மேம்பாட்டு பயிற்சி தலைவர் சியாம் ராஜ், கல்லுரி முதல்வர் சிந்தனா பேசினார்

இறுதியில் மாணவி நன்றி உரையாற்றினார்





# பம்மல் அருள்மிகு ஸ்ரீ நவசக்தி விநாயகர் ஆலயத்தில் 41ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா

பம்மல் ஆக.29

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பம்மலில் ராஜீவ் காந்தி நகர் அருள்மிகு ஸ்ரீ நவசக்தி விநாயகர் ஆலயத்தில் 41ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு சிறப்பு பூஜை மற்றும் சாமி திரு விதி உலா வே.மதியழகன் தலைமையில் மிக சிறப்பாக நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளர்களாராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட துணைச் செயலாளருமான இ.கருணாநிதி, பம்மல் தெற்கு பகுதி செயலாளரும் ஒன்னாவது மண்டல குழு தலைவருமான வே.கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு அருள்மிகு நவசக்தி விநாயகர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு செய்து திரு விதி உலா ராஜீவ் காந்தி நகர், பெரியார் நகர், ஜபாபதி நகர், காந்திநகர் ஆகிய உள்ளடங்கிய தெருகளில் சென்றடைந்தனர் அதனைத் தொடர்ந்து மாபெரும் பொதுமக்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் ஆலய நிர்வாக குழு மற்றும் ஊர் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சி சிறப்பித்தனர்



■ திருப்பூர் மாவட்டம் (28.08.2025) தாராபுரம் சட்டமன்ற தொகுதி, கொளத்துப்பாளையம் பேரூராட்சி, இராமமூர்த்தி நகர், இந்திராகாந்தி மெட்ரிக்குலேசன் பள்ளியில் நடைபெற்ற கொளத்துப்பாளையம் பேரூராட்சிக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்ததோடு, ஆய்வு மேற்கொண்டு முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு அரசு சார்ந்த சான்றிதழ்கள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினேன். உடன் தாராபுரம் வருவாய் வட்டாட்சியர் அவர்கள், தாராபுரம் தனி வட்டாட்சியர் சமூக பாதுகாப்புத்திட்ட அலுவலர் அவர்கள், தாராபுரம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும், கொளத்துப்பாளையம் பேரூராட்சித் துணைத்தலைவருமான திரு. ரி.ரி.துரைசாமி அவர்கள், கொளத்துப்பாளையம் பேரூராட்சித் தலைவர் திருமதி. சுதா கருப்புசாமி அவர்கள், அரசு அதிகாரிகள், வார்டு கவுன்சிலர்கள், இந்நாள்முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# வேலூரில், நடேசன் கிளினிக் அண்ட் நியூரோவேவ்ஸ் டயக்னெஸ்டிக்ஸ் திறப்பு விழா

வேலூர், ஆக.29-

வேலூர் மாவட்டம், வேலூர் கொசப்பேட்டை சி.எஸ்.பி. பில்டிங்ஸ், தென்னை மரத் தேர்வில், நடேசன் கிளினிக் அண்ட் நியூரோவேவ்ஸ் டயக்னெஸ்டிக்ஸ் திறப்பு விழா நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக டைரக்டர் ஆப் நியூரோ சைன்ஸ் க்ளினீகல்ஸ் குளோபல் மருத்துவமனை டாக்டர். தினேஷ் நாயக் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு துவக்கி வைத்தார். உடன் டாக்டர் நடேசன் தாமோதரன், திமுக பிரமுகர் சுப்பிரமணி மற்றும் மருத்துவர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# ஏனாதி கணக்கன்குடி புதிய கலையரங்கத்தை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் தொடங்கி வைத்தார்

சிவகங்கை ஆக.29

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் கிழக்கு ஒன்றியம் கணக்கன்குடி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 7.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்கத்தினை சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் ஆ. தமிழரசி ரவிக்குமார் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு ஒன்றியக்கழக செயலாளர் ஏனாதி எம்.ஏ.கடம்பசாமி , மாவட்ட விவசாய அணி துணைத்தலைவர் சொக்கனாதிருப்பு டி. ஆர். சேகர், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் அச்சங்குளம் முருகன், முனைவர் இளங்கோவன், ஊராட்சி மேனாள் தலைவர்கள் கவிதா முருகன் , விஜயா ஆறுமுகம், மடப்புரம் அப்பாச்சாமி, யோகேஷ் அம்பலம் , இலக்கிய அணி பிரபு உள்ளிட்ட ஒன்றிய, கிளைக்கழக திமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161